[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

III.—ADJOURNMENT MOTIONS.

(1) ARREST AND DETENTION OF STUDENTS

MR. SPEAKER : The hon. Leader of the Opposition, hon. Members Sri K. R. Nallasivam, Sri M. Kalyanasundaram and others have given notice of motions for an adjournment of the business of the House for the purpose of discussing the arrest of students under the Defence of India Rules.

* திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத்தலைவர் அவர்களே, "மாநிலத்தில் அமைதி நிலவியிருக்கும்போது எந்த விதமான காரணமும் இல்லாமல் பழிவாங்கும் எண்ணத்துடன், எந்த விதமான போராட்டமும் நடத்தப் போவதில்லை என்று மாணவர்கள் அறிவித்த பின்பும் தமிழக அரசாங்கம் நாடு முழுவதும் ஏராளமான மாணவர்களை இந்திய பாதுகாப்புச் சட்ட விதிகளின் கீழ் கைது செய்திருப்பதைப்பற்றி விவாதிக்க" இந்த மன்ற நிகழ்ச்சிகளை ஒத்தி வைக்குமாறு கோரும் தீர்மானத்தை நான் கொடுத்திருக்கிறேன். இன்றைய தினம் எந்த விதமான காரிய காரணங்களும் கூறாமல் பல மாணவர்கள் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த நடவடிக்கைகளை கைவிட்டு, நாட்டில் பொதுவான அமைதி நிலவுவதற்கு இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நாம் ஒரு முடிவு எடுத்தால் நல்ல விளைவுகள் ஏற்படக்கூடும். மாணவர்கள் மீண்டும் போராட்டத்தை நடத்தவேண்டும் என்று சொல்லவும் இல்லை. அதை யாரும் ஆதரிக்கவும் இல்லை. மாணவர்கள் எந்த விதமான போராட்டத்திலும் ஈடுபடவில்லை என்று அறிக்கையும் விட்டிருக்கிறார்கள். இந்த நிலையில் மாணவர்களை கைது செய்து இருப்பதின் காரணமாக, சில கல்லூரிகளில் வேலை நிறுத்தம் ஏற்பட்டிருக்கிறது. இது எங்கே கொண்டுபோய்விடும் என்று சிந்திக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த சந்தர்ப்பத்தில், இதைப்பற்றி இங்கு விவாதிப்பதின் மூலமாக நல்லதொரு சூழ்நிலையை உருவாக்க முடியும் என்று கருதுகின்ற காரணத்தால், இந்தப் பிரச்னைகளைப் பற்றியெல்லாம் விரிவான அளவில் விவாதிப்பதற்காக இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தை தாங்கள் அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

SRI M. KALYANASUNDARAM rose—

MR. SPEAKER : Let the hon. Member be brief.

SRI M. KALYANASUNDARAM : Sir, my motion is slightly different. It relates to the action of the Government in ordering the arrest and detention of several students in Coimbatore, Madurai and other places, invoking the powers under the Defence of India Rules and thereby provoking unrest among the students.
சாதாரணமாக நாட்டில் மாணவர்களிடத்தில் தற்போது அமைதி நிலவிக் கொண்டுதான் இருந்தது ஆனால் . . .

[27th July 1965

MR. SPEAKER : I do not want the hon. Member to go into the details.

திரு. மீ. கலியாணசுந்தரம் : *நான் இதில் முக்கியமாக சொல்ல விரும்புவது, இதில் அரசாங்கத்திற்கு பொறுப்பு உண்டா இல்லையா என்று நாம் பார்க்கவேண்டும். அரசாங்கத்திற்கு நிச்சயமாக பொறுப்பு இருக்கிறது. அரசாங்கத்தின் உத்தரவு இல்லாமலா, கீழ் உள்ள அதிகாரிகள் மாணவர்களை கைது செய்திருக்கிறார்கள்?*

MR. SPEAKER : That is not the only consideration.

SRI M. KALYANASUNDARAM : Sir, let us examine the points one by one. In the first place, the motion must refer to a matter in which the responsibility of the Government is clearly involved. This is a matter in which the responsibility of the Government is clearly involved. .

MR. SPEAKER : There is no doubt about it.

SRI M. KALYANASUNDARAM : Secondly, the motion must not refer to grievances which can be remedied only by legislation. This is not such a grievance. By an executive order of the Government, the students can be released and the authorities can be prevented from resorting to arrest under the Defence of India Rules.

Then the matter to be discussed must involve more than the ordinary administration of the law. Resort to arrest and detention, when there is peace in the State, is not a matter coming under the ordinary administration of law. Extraordinary powers have been used here. If somebody is arrested under Section 151, Criminal Procedure Code then . . . .

MR. SPEAKER : We have held on several occasions that such matters, including the arrest of the Members of the Legislature, relate to law and order.

SRI M. KALYANASUNDARAM : The motion given notice of by me satisfies all the ten ingredients set out in the Rules.

MR. SPEAKER : I do not think so.

SRI M. KALYANASUNDARAM : That is my submission, Sir. This is a matter which should be discussed in this House and during the discussion we may be able to offer several valuable suggestions which will help the Government to maintain law and order without resorting to the Defence of India Rules.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, "மாநிலத்தில் அமைதி நிலவியிருக்கும்போது எந்தவிதமான காரணமும் இல்லாமல் தமிழக அரசாங்கம் நாடு முழுவதும் ஏராளமான தி.மு. கழகத் தோழர்களை இந்திய பாதுகாப்புச் சட்ட விதிகளின் கீழ் கைது செய்திருப்பதைப்பற்றி விவாதிக்க" சபை விதிகள் 42-ன் கீழ் . .

27th July 1965]

MR. SPEAKER : That is a different matter. We have now taken up the motion relating to the arrest of the students.

SRI K. R. NALLASIVAM rose—

MR. SPEAKER : The hon. Member need not repeat what has been stated earlier. May I know whether there is any new point?

SRI K. R. NALLASIVAM rose—

கனம் சபாநாயகர் : இப்போது சொன்னதைத் தவிர கனம் அங்கத்தினர் மேலும் என்ன சொல்லப் போகிறார்? இப்போது மற்றவர்கள் சொன்னதை ரிப்பீட் செய்யவேண்டாம்.

திரு. க. ர. நல்லசிவம் : அதாவது முன்பு நடந்த கலவரச் சூழ்நிலை இப்போது மாறி இருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. ஏதாவது ஒன்றிரண்டு மாணவர்கள் வேண்டுமானால் திட்டமிட்டிருந்தாலும், அவர்களைக் கைது செய்வதன் மூலம் அது போன்ற கிளர்ச்சி தோன்றக் கூடிய சூழ்நிலையை உருவாக்கக் கூடிய நிலை ஏற்படுமாதலால் இந்த ஒத்திவைப்புப் பிரேரணையை விவாதிப்பதின் மூலம் நல்லதொரு முடிவு எடுக்கலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

MR. SPEAKER : The hon. Member Sri Nallasivam is only giving advice to the Government and not speaking on the adjournment motion.

* கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் சபாநாயகர் அவர்களே தாங்கள் குறிப்பிட்டபடி இந்த விதியின் எட்டாவது பிரிவிலே

"The matter to be discussed must involve more than the ordinary administration of the law".

என்று இருக்கிறது. இது சட்டப்படி எடுத்துக்கொள்ளப்பட்ட நடவடிக்கை—சட்டப்படி நிர்வாக வகையிலே எடுத்துக்கொள்ளப்பட்ட நடவடிக்கை. டிஃபென்ஸ் ஆஃப் இண்டியா ரூல்ஸ் ஆக இருந்தாலும் அதுவும் சட்டம்தான். இந்த நடவடிக்கைகள் நிர்வாக வகையிலேதான் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஆகையினால் இது அவசரப் பிரேரணைக்கு உரியது அல்ல என்று தான் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கொடுத்திருக்கிற பிரேரணையின் வாசகத்தில், 'பழிக்குப் பழி வாங்கும் நோக்கத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த எண்ணம் இருந்தால் அரசாங்கத்தின் மீது சென்ஷர் மோஷன் கொண்டு வரலாம். தவறுதலாக, பழிக்குப் பழி வாங்கும் நோக்கத்தில் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று அரசாங்கத்தின் மீது சென்ஷர் மோஷன் கொண்டு வரலாமே தவிர, இது அவசரப் பிரேரணைக்கு உரியதல்ல.

மாணவர்கள் மீது நடவடிக்கை என்பது அல்ல. குறிப்பிட்ட சில மாணவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. தகுந்த ஆதாரத்துடன்தான் நடவடிக்கை எடுத்துக்

[திரு. எம். பக்தவத்சலம்] [27th July 1965

கொள்ளப்பட்டிருக்கிறது என்று நான் கூறுவேன். இதற்கு உயர்நீதி மன்றத்தில் விவாதிக்கும்போதுகூட காரணங்கள் கூற வேண்டியதில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் இந்த மன்றத்தில் நான் குறிப்பிட விரும்புகிறேன். இதைப்பற்றி குறை கூறுகிற, கண்டிக்கிற கனம் எதிர்க் கட்சி உறுப்பினர்கள், நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்ட அந்தக் குறிப்பிட்ட சில மாணவர்கள் போக்கு, அவர்கள் பேச்சு ஆகியவற்றை அவர்கள் ஆதரிக்கிறார்களா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். என்னிடம் தகுந்த ஆதாரம் இருக்கிறது. எல்லாவற்றையும் பார்த்துத்தான் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. பொதுவாக மாணவர்கள் என்று அல்ல--குறிப்பிட்ட சில மாணவர்கள் பலாத்காரத்தைத் தூண்டிவிட்டு, பலாத்காரத்தில் ஈடுபடும் வகையில் பொது மேடைகளில் பேசியிருக்கிறார்கள். மேலும் ஒரு இயக்கம் நடத்த வேண்டுமென்று பேசியிருக்கிறார்கள். நாட்டைத் துண்டாக்க வேண்டுமென்று அவர்கள் பேசியிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள் விட்டதை நாங்கள் எடுத்துக்கொள்ளுகிறோம் என்று பேசியிருக்கிறார்கள். ரொம்ப ஆட்சேபகரமானவகையில் பேச்சு இருந்தது. அதற்கெல்லாம் எங்களிடம் ஆதாரம் இருக்கிறது. குறிப்பிட்ட சில மாணவர்கள் அமைதிக்கு பங்கம் விளைவிக்கும் வகையில் முன்னமேயே ஈடுபட்டு வந்தார்கள். இவர்களால் அமைதிக்கு பங்கம் விளையக் கூடாது, நாம் அமைதியை நிலைநாட்ட வேண்டும் என்றுதான் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. வேறு ஒன்றும் இல்லை. ஆகையால் இது அவசரப் பிரேரணைக்கு உரியதல்ல என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. மு. கருணாநிதி : கனம் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதி பெற்று அமைச்சர் அவர்களிடமிருந்து சற்று விளக்கம் பெற விரும்புகிறேன். மாணவர்கள் கைது செய்யப்பட்டது சம்பந்தமாக மதுரை கல்லூரியில் வேலை நிறுத்தம் செய்திருந்த நேரத்திலே, "நீங்களெல்லாம் கல்லூரிக்குத் திரும்பச் செல்லுங்கள், கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்வதற்கு ஏற்பாடு செய்கிறேன்" என்று அகில இந்திய காங்கிரஸ் தலைவர் வாக்குறுதி அளித்ததாகப் பத்திரிகையில் செய்தி வந்ததே, அது உண்மையா? அதுபற்றி அவர்களால் மேற்கொண்டு எடுத்துக்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்ன என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பத்திரிகைகளில் எத்தனையோ செய்திகள் வருகின்றன. அதெல்லாம் ஆதாரமுள்ள செய்திகள் அல்ல.

திரு. மீ. கலியாணசுந்தரம் எழுந்தார்—

MR. SPEAKER : I am sorry I cannot allow any questions to be put at this stage.

திரு. மீ. கலியாணசுந்தரம் : நான் முதல் அமைச்சர் அவர்களிடத்தில் ஒன்றும் கேட்கவில்லை. தங்களிடத்தில் கேட்க விரும்புகிறேன்.

27th July 1965] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு கனம் முதல் அமைச்சர் அவர்கள் மாணவர்கள் மீது பல குற்றச்சாட்டுக்களைச் சொல்லி அவைகளெல்லாம் பத்திரிகைகளில் வர ஏற்பாடு செய்து விட்டார்கள். அந்த மாணவர்கள் இப்போது சிறையில் இருக் கிறார்கள். ஆகையால்தான் இதைப்பற்றி விவாதம் செய்ய வேண்டும் என்று சொல்லுவது. . . .

MR. SPEAKER : The hon. Member has spoken on his motion and the Hon. Chief Minister has replied to it.

திரு. மீ. கலியாணசுந்தரம் : நான் என் மோஷனைப் பற்றிப் பேசும் போது அரெஸ்ட் பற்றிக் குறிப்பிட்டேன். அதை விவாதத் திற்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று குறிப்பிட்டேன் . . .

கனம் சபாநாயகர்: காரணம் இல்லாமல் அரெஸ்ட் செய்திருக் கிறார்கள் என்று கனம் அங்கத்தினர் சொன்னார்கள். அதற்கு கனம் முதல் அமைச்சர் அவர்கள் காரணம் இருக்கிறது என்று சொன்னார்கள். அதற்கு மேல் கனம் அங்கத்தினர் போகக் கூடாது.

திரு. மீ. கலியாணசுந்தரம் : என்னுடைய தீர்மானத்தில் காரணம் இல்லை என்று சொல்லவில்லை. காரணம் இருக்கிறதா, இல்லையா என்று என்னுடைய தீர்மானத்தில் குறிப்பிடவில்லை. டிஃபென்ஸ் ஆஃப் இண்டியா ரூல்ஸின் கீழ் கைது செய்யப்பட்டது பற்றிக் குறிப்பிட்டேன். மற்றச் சட்டங்கள் இருக்கின்றன. அவை களின் கீழ் நடவடிக்கை எடுத்து வழக்குத் தொடரலாம். அப்பாவி மாணவர்களைக் கைது செய்து ஜெயிலில் வைக்க வேண்டாம். கல்லூரியைச் சேர்ந்த மற்றவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்வதற்கு பதில் மாணவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளுகிறார்கள். . . .

MR. SPEAKER : The hon. Member is going out of the way. He is not addressing me. He is giving some lecture to others. When he speaks, he must put forth the point. I am not concerned with matters which are not quite relevant to the discussion.

திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் முதல் அமைச்சர் அவர்கள் மாணவர்கள் மீது பல குற்றச் சாட்டுகளைக் கூறியிருப்பதால் இது அவசியம் விவாதிக்கப்பட வேண்டியதாக இருக்கிறது . . .

கனம் சபாநாயகர் : கனம் முதல் அமைச்சர் அவர்கள் மாணவர் கள் மீது குற்றச்சாட்டுக்களைக் கொண்டு வந்ததால் தான் இந்த அட்ஜர்ன்மெண்ட் மோஷன் வந்திருக்கிறதா ?

திரு. மீ. கலியாணசுந்தரம் : இன்னொன்று, கனம் முதல் அமைச்சர் அவர்கள் கூறும்போது இது நம்பிக்கையில்லாத் தீர் மானத்திற்கு உரிய விஷயம் என்று சொன்னார்கள். ஒத்திவைப்பு தீர்மானம் கொண்டு வந்து, அதற்கு ஆதரவாக 22 பேர்கள் எழுந்து நின்று, அதை விவாதம் செய்து, அது நிறைவேறினால் அதுவும் கண்டனத்திற்கு உரிய விஷயம்தான். இதற்கும் அதற்கும் வித்தி யாசம் ஒன்றும் இல்லை. இந்த மாதிரி நடந்துகொண்ட அரசாங்

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [27th July 1965

-கத்தைக் கண்டிக்கும் நோக்கத்தோடுதான் இந்தத் தீர்மானம் கொண்டுவரப் பட்டிருக்கிறது. இந்த மாதிரி மாணவர்களைச் சிறை செய்வது ரொம்பக் கடுமையான விஷயம். ஆகையால், இது ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்குரிய விஷயம் என்று கனம் சபாநாயகர் அவர்கள் அனுமதி கொடுத்தால், சபையில் எத்தனை பேர்கள் எழுந்து நிற்கிறார்கள், ஆதரவு கொடுக்கிறார்கள் என்று பார்த்து முடிவு செய்யலாம். இந்த முக்கியமான விஷயத்தில், கனம் சபா நாயகர் அவர்கள் மாணவர்கள் மீது அனுதாபத்தோடு பிரச்னையை பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

MR. SPEAKER : I do not think that this matter involves more than the ordinary administration of the law. Therefore, I withhold consent to the adjournment motion.

(2) ARREST AND DETENTION OF D.M.K. MEMBERS UNDER THE DEFENCE OF INDIA RULES.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மாநிலத்தில் அமைதி நிலவியிருக்கும்போது எவ்விதக் காரணமுமில்லாமல் தமிழக அரசாங்கம் நாடு முழுவதும் ஏராளமான திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களை இந்தியப் பாதுகாப்புச் சட்ட விதிகளின் கீழ் கைது செய்திருப்பதைப்பற்றி விவாதிக்க மன்ற நிகழ்ச்சிகளை ஒத்திவைக்குமாறு கோரும் பிரேரணையை நான் கொடுத்திருக்கிறேன்.

தலைவர் அவர்களே, இதுபற்றி கனம் முதல் அமைச்சர் அவர்களிடத்தில் நேரிலே எதிர்க் கட்சித் தலைவர்கள் சென்று விவாதித்தும், சட்ட மன்றத்தில் எடுத்துச் சொல்லியும் இதுவரையில் அதற்கான பலன் கிடைக்காத காரணத்தினாலும், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள்—டாக்டர்கள், வழக்கறிஞர்கள், வாணிபத்தில் ஈடுபட்டிருக்கிறவர்கள், கழகத்தில் பொறுப்பான பதவிகளில் செயலாளர்களாக பொருளாளர்களாக, நிர்வாகிகளாக இருக்கிறவர்கள், ஏறத்தாழ ஐம்பதுக்கும் மேற்பட்டவர்கள் பாதுகாப்புச் சட்டப்படி கைது செய்யப்பட்டு வேலூர், திருச்சி போன்ற இடங்களில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். காரணம் இருக்கிறது என்று சொல்லப்படுகிறதே தவிர, என்ன காரணம் என்று சொல்லப்படவில்லை. பாதுகாப்புக் கைதிகளாக வைக்கப் பட்டிருக்கிற காரணத்தினால் நாட்டிலே அமைதியின்மையான சூழ்நிலை இருக்கிறது. அவர்கள் விடுதலை செய்யப்படவேண்டும் என்ற கோரிக்கையையொட்டி இந்த ஒத்தி வைப்புப் பிரேரணை எழுப்பப் பட்டிருக்கிறது. இதை விவாதிப்பதினால் அதன் மீது நல்ல முடிவு ஏற்படும் என்பதற்காக இதை விவாதிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் சபாநாயகர் அவர்களே, பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு டிட்டன்யூவாக வைக்கப்பட்டிருக்கிறார்கள் ஒரு சிலர். அதுவும் நிர்வாக சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைதான். அதோடு இது சமீபத்தில் நடைபெற்றதும் அல்ல. முன்பு குறிப்பிடப்பட்ட மாணவர்களைப் பொறுத்த வரையில் அவர்கள் மீது சமீபத்தில் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டது. ஆனால், கனம் எதிர்க்-

27th July 1965] [திரு. எம். பக்தவத்சலம்]

கட்சி துணைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்ட டிட்டென்யூக்களைப் பொறுத்த வரையில் நடவடிக்கை சமீபத்தில் எடுத்துக்கொள்ளப் பட்டதல்ல. (குறுக்கீடு.) எடுத்துக்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்று சொன்னேன். சமீபத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட நடவடிக்கை அல்ல என்று சொன்னேன். அதோடு, சிலர் மீது அமைதியைக் காக்கும்பொருட்டு நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டதைப் பொறுத்த மட்டில் அவர்களுடைய அரசியல் போக்கு, அரசியல் கட்சி என்ன என்பதைப் பொறுத்து அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவில்லை. இந்த அரசியல் கட்சியைச் சேர்ந்தவர் என்று நடவடிக்கை எடுத்துக்கொள்ள வில்லை. அதுபற்றி எதிர்க் கட்சி துணைத் தலைவர் அவர்கள் என்னிடம் பேசியபோதே குறிப்பிட்டிருக்கிறேன். அமைதியை நிலைநாட்ட நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கிறது. முன்பேயே இந்த மன்றத்தில் வேறு ஒரு நடவடிக்கைபற்றி, எதிர்க்கட்சித் துணைத் தலைவா அவர்களைப் பற்றி கேள்வி கேட்டபோது குறிப்பிட்டேன். எல்லாவற்றையும் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை ரெவ்யூ செய்கிறோம். தொடர்ந்து இருக்கவேண்டுமா, இல்லையா என்று பார்த்து முடிவு செய்கிறது அரசாங்கம். ஆறு மாதம் என்று கூட அல்ல. அதற்கு முன்பாகவே கூட எடுத்துக்கொள்ளப்படுகிறது. அனாவசியமாக ஒருவரைக் கூட சிறையில் வைக்கவேண்டுமென்ற எண்ணம் அரசாங்கத்திற்கு சிறிது கூட இல்லை. எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைப்படி எவ்வளவு நாள் வைத்திருக்க வேண்டுமோ அதற்கு மேல் ஒரு நாள் கூட வைத்திருப்பதில்லை. ஆறு மாதங்களுக்கு ஒரு முறை பரிசீலனை செய்து, அதற்கு முன்னரே கூட பரிசீலனை செய்து வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளும் என்று சொல்ல விரும்புகிறேன். எப்படியும் இது அவசரப் பிரேரணைக்கு உரியதல்ல என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

MR. SPEAKER : I withhold consent to the adjournment motion.

IV.—CALLING ATTENTION TO LOCATION OF A STEEL PLANT AT SALEM.

திரு. இராம. அரங்கண்ணல் : கனம் சபாநாயகர் அவர்களே, ஐந்தாவது உருக்கு ஆலையை நிறுவுவது சம்பந்தமாக ஆங்கிலோ-அமெரிக்க கூட்டு நிறுவனம் வெளியிட்ட அறிக்கையின் விளைவாகவும், சேலத்தில் ஓர் உருக்கு ஆலையை நிறுவ வேண்டியதன் அவசியத்தை முன்னிட்டும் ஏற்பட்டுள்ள நிலைமை குறித்த போது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை கனம் தொழில் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, Sir, I wish to make the following statement :—

The detailed Project report on the Neyveli–Salem Steel Project was submitted to the Government of India by the Consultants Messrs. M. N. Dastur and Company, Private, Limited, Calcutta, in August 1964. The Government of India entered into an